சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை-08
ந.க.எண்.4791/ஆ2/2024, நாள். 15 .07.2024

பொருள்: பள்ளிக்கல்வி- சென்னை மாவட்டம்- தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்- புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது (Inspire award) - 2024-2025 ஆம் ஆண்டிற்கு புதிய பதிவுகள் மேற்கொள்ள - கோருதல் - சார்ந்து.

பார்வை: சென்னை-25, தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மைய செயல் இயக்குநரின் கடித எண்.3447/P1/2024, நாள்.28.06.2024.

.....

பார்வையில் காண் கடிதத்தின்படி, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் சார்பாக நடத்தப்படும் 2024-2025 ஆம் கல்வியாண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுகளுக்கான புதிய பதிவுகள் 01.07.2024 முதல் 15.09.2024 வரை பதிவுகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டற்கு சென்னை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் புதிய பதிவுகள் www.inspireawards-dst.gov.in என்ற இணையதளத்தில் 01.07.2024 முதல் 15.09.2024 வரை பதவுகள் மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு வகுப்பிற்கு ஒருவர் என ஐந்து வகுப்புகளுக்கு ஐந்து பேர் என பதிவிடலாம். ஐந்து பேருக்கு மேல் பதிவிடக் கூடாது. நடுநிலைப் வகுப்புகளில் ஒரு வகுப்பிற்கு ஒருவர் வீதம் மூன்று பேரை பதிவு செய்யலாம். கூடுதலாக பதிவு செய்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

கடவுச் சொல்லை மறந்துவிட்ட பள்ளிகள் forget password என்ற பட்டணை அழுத்தி அதன் மூலம் தங்கள் கடவுச் சொல்லை புதுப்பித்துக் கொள்ளலாம். UserID மறந்துவிட்டால் இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களிடம் விண்ணப்பித்து மாற்றிகொள்ள வேண்டும். தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் மூலமாக இதை மாற்ற இயலாது.

மேலும் கீழ்க்கண்ட குறிப்புகளை பின்பற்றி புதிய பதிவுகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டள்ளது.

1) பதிவு செய்யும்போது அலைபேசி எண் ஓராண்டு அல்லது ஈராண்டுத் தொடர்புக்கு ஏற்ற வகையில் அமையுமாறு பதிவிட வேண்டும். பள்ளியின் தொலைபேசி எண் இருப்பின் அதை அவசியம் பதிவிட வேண்டும். பள்ளி மாறிச் செல்பவர்கள் ஓய்வு பெறப்போகிறவர்கள் அலைபேசியை கண்டிப்பாகப் பதிவிட வேண்டாம்.

2) மின்னஞ்சல் முகவரி கண்டிப்பாகப் பள்ளி மின்னஞ்சல் மட்டுமே குறிப்பிட வேண்டும். தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரியினை பதிய வேண்டாம்.
3) வங்கி கணக்கு எண்களை பதிவு செய்யும் போது வங்கி கணக்கு மாணவரின் பெயரின் தனியான கணக்காக இருக்க வேண்டும். பெற்றோர் அல்லது உறவினர் பெயரில் உள்ள வங்கி கணக்கு விவரங்கள் கண்டிப்பாக ஏற்றுகொள்ளப்பட மாட்டாது. மாணவரின் பெயரில் புதியதாக வங்கி கணக்கு ஆரம்பித்துக் கொள்வது ஏற்புடையது. வங்கி கணக்கு தொடர்ந்து செயல்பட்டிருக்க வேண்டும். வங்கி கணக்கு எண், வங்கியின் பெயர், IFSC Code No. முதலியவற்றை பிழையின்றிக் குறிப்பிட வேண்டும்.
4) ஏற்கனவே புத்தாக்க அறிவியல் ஆய்வு விருது பெற்றவர்கள் இந்த ஆண்டு மீண்டும் பதிவு செய்யக்கூடாது.
5) மாணவர்களுடைய ஆய்வுகள் புதியதாக, சிறப்பாக அமைந்தால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.10,000 வழங்கப்படும்.

எனவே மேற்காண் வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் பள்ளியிலும் மாணவர்களை குறிப்பிட்டுள்ள நாட்களுக்குள் 01.07.2024 முதல் 15.09.2024 வர) இணையதளத்தில் பதிவுகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: பார்வையில் காண் கடித நகல்

முதன்மைக்கல்வி அலுவலர்
சென்னை

இ/ப
15/7/2024

பெறுநர்
அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள்,
சென்னை மாவட்டம் (உரிய மாவட்ட கல்வி அலுவலர்கள் வாயிலாக)

நகல்

1. சென்னை–25, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மைய செயல் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. சென்னை–06, பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவர்கள் (இடைநிலை, தனியார் பள்ளிகள் மற்றும் தொடக்கக் கல்வி),
   சென்னை மாவட்டம். ( தங்கள் பள்ளிகளுக்கு மின்னஞ்சல் மூலம் இச்செயல்முறையினை அனுப்பிவைக்க தெரிவிக்கப்படுகிறது.)

**Tamilnadu Science and Technology Centre**
(Department of Higher Education, Government of Tamilnadu)
Gandhi Mandapam Road, Chennai - 600 025.

Office : 044 - 24410025
Direct : 044 - 24916787
Website: www.tnstc.gov.in
E-mail : tnstc.science@gmail.com

**Thiru. I.K. Lenin Tamilkovan,** M.Sc.,
Executive Director, FAC.,

004791

கடித எண் 3447/ /P1/2024 நாள்: 25.06.2024

மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்
சென்னை மாவட்டம்

அன்புடையீர்,

பொருள்: தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்.சென்னை - புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது 2024–2025 ஆம் ஆண்டிற்கான புதிய பதிவுகள் மேற்கொள்வது - தொடர்பாக.

பார்வை : National Innovation foundation – India - Coordinator letter. F. No. DST/INSPIRE-MANAK/NOMINATIONS/2024-25 Dated 26.06.2024

------

2024 – 2025 ஆம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுகளுக்கான புதிய பதிவுகள் 2024 ஜுலை 1ம் தேதியிலிருந்து தொடங்கப்படுகிறது. அதற்காக பள்ளி மாணவர்கள் கடந்த ஆண்டுகளில் பதிவு செய்ததைப் போலவே இந்த ஆண்டும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களைப் பதிவு செய்ய வேண்டும். இதற்காக **www.inspireawards-dst.gov.in** என்ற இணையதளம் 2024 ஜுலை 1-ம் தேதியிலிருந்து 2024 செப்டம்பர் 15-ம் தேதி வரை செயல்படும். வகுப்பிற்கு ஒருவர் என ஐந்து வகுப்புகளுக்கு ஐந்து பேர் எனப்பதிவிடலாம். ஐந்து பேருக்கு மேல் பதிவிடக் கூடாது. (நடுநிலை வகுப்புகள் மூன்று பேர்)

இந்த ஆண்டு அனைத்துப் பள்ளிகளும் பதிவு செய்ய ஆவன செய்யுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்புகள்:

1. பதிவு செய்யும்போது அலைபேசி எண் ஓராண்டு அல்லது ஈராண்டுத் தொடர்புக்கு ஏற்ற வகையில் அமையுமாறு பதிவிட வேண்டுகிறோம். பள்ளியின் தொலைபேசி எண் இருப்பின் அதை அவசியம் பதிவிட வேண்டுகிறோம். பள்ளி மாறிச் செல்பவர்கள், ஓய்வு பெறப்போகிறவர்கள் அலைபேசியைக் கண்டிப்பாகப் பதிவிட வேண்டாம்.
2. மின்னஞ்சல் கண்டிப்பாகப் பள்ளி மின்னஞ்சல் மட்டுமே குறிப்பிடவேண்டும். தனிப்பட்ட மின்னஞ்சல்களைப் பதிய வேண்டாம்.

**Tamilnadu Science and Technology Centre**
CHENNAI - 600 025.



3. வங்கிக்கணக்கு மாணவரின் பெயரில் மட்டுமே இருக்க வேண்டும். பெற்றோர் அல்லது உறவினர் பெயரில் உள்ள வங்கிக்கணக்கு விவரங்கள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. வங்கிக்கணக்கு மாணவரின் பெயரில் புதிதாக ஆரம்பித்துக் கொள்வது ஏற்புடையது.
4. ஏற்கனவே புத்தாக்க அறிவியல் ஆய்வு விருது பெற்றவர்களை இந்த ஆண்டு மீண்டும் பதிவு செய்யக்கூடாது.
5. மாணவர்களுடைய ஆய்வுகள் புதியதாக, சிறப்பாக அமைந்தால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ 10,000 வழங்கப்படும்.

தங்கள் உண்மையுள்ள

28/6/24

செயல் இயக்குநர்(மு.கூ.பொ)